1970 மார்ச் 4]

for the second mine cut came up for special mention. Government of India officials were satisfied about these. This was followed by a meeting on 21st October 1969 with the then Union Minister for Steel and Heavy Engineering.

* 201. வினு திரு. கே. போஜன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், இத்தொழிற்சாலை அமைக்கும் வேலை எப்பொழுதிலிருந்து ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. க. கோமதிசங்கர திட்சிதர்: பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரியான இரும்பு தாதுக்களை உடனடியாக வெட்டியெடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நாம் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். கஞ்சமலை போன்ற பகுதிகளில் இரும்புத் தாதுக்களை வெட்டி எடுக்கக்கூடிய வேலைகளைத் தொடங்கியிருக்கிறோம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மத்திய அரசு அதிகாரிகள் இதுவிஷயமாக என்ன கருத்து கூறியிருக்கிறார்கள்? இப்போது ஆரம்பிக்கப்படுவதற்கான சிபாரிசு செய்யக்கூடிய தன்மையிலே கூறினார்களா? அல்லது இப்போது ஆரம்பிக்கக்கூடாது, இப்போது சூழ்நிலை சரியில்லை, இப்போது நிதி நிலைமை சரியில்லை என்று கூறினார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு அதிகாரிகள் சேலம் உருக்காலைபற்றி விவாதித்தார்கள். பல பிரச்சினைகளை எழுப்பினார்கள். நம்முடைய அரசின் சார்பிலே இந்தத் திட்டம் ஏற்பட வேண்டியதன் அவசியத்தைச் சொன்னோம். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இருப்பதால் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தைக் குறித்து அத்தனை புள்ளி விவரங்களையும் சேகரித்து அறிக்கைகள் தயாராக வைத்திருக்கிறோம். இதை உடனடியாக நிறைவேற்றுவதில் எந்தவிதமான தடையும் இல்லையென்பதை நிரூபித்திருக்கிறோம். டெல்லியில் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களையும் சந்தித்திருக்கிறோம். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்து, நம்முடைய அரசிடத்திலே கலந்துபேசுகிற சமயத்தில் எழுப்பப்பட்ட சந்தேகங்கள் தீர்க்கப்பட்டு அதற்கான

புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முன்பு இரயில்வே துறையை ஏற்றிருந்த திரு. பூனச்சா அவர்கள் நம்முடைய அமைச்சர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினர். அவர்கள் இறுதியாக பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் 'பச்சைக்கொடி காட்டிவிட்டேன் சேலம் இரும்பாலைக்கு' என்று கூறினர்கள். இரயில்வே அமைச்சராக இருந்த அவர் 'பச்சைக்கொடி' காட்டி விட்டேன் என்று சொன்னதால், கட்டாயம் சேலம் உருக்காலை வரும் என்று நாங்கள் தெரிந்துகொண்டோம்.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, சேலம் இரும்பாலைத் தொழிற்சாலையை அமைப்பதுபற்றி இப்போது யோசித்து வருவதாகச் சொன்னர்கள். அது மிக அதிக நாட்களாக தாமதமாகிக் கொண்டே வருகிறதே. அதை உடனடியாக அமைக்க மத்திய சர்க்காரிடம் இந்த அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு செ. மாதவன் : திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதனால் இந்தத் திட்டத்தைக் கொடுக்கலாம் என்று மத்திய அரசு நினைத்திருக்கலாம்.

திரு. ஆலடி அருணு : நாட்டில் இரும்புப் பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது—அப்படி இருக்கிறபோது சேலம் இரும்பாலைத் திட்டத்திற்குக் காலதாமதம் காட்டப்பட்டு வருகிறது. இந்தக் காலதாமதத்திற்கு ஏதாவது குறிப்பிட்ட வேறு காரணங்கள் இருக்கக்கூடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : நம்முடைய மாநில அரசின் வாதமும் இதுதான். நாட்டில் இரும்புப் பற்றாக்குறை இருக்கும் போது புதிதாக இரும்பாலையைத் துவக்குவதில் தயக்கம் காட்டுவது தவறு என்று வற்புறுத்தி வருகிறோம். அடுத்து, மத்திய சர்க்கார் வடமாநிலங்களில் உள்ள பெரிய தொழிற்சாலைகளில் முதலில் கவனம் செலுத்த வேண்டும் என்கிறர்கள். நாம் பரவலாக சிறு சிறு தொழிற்சாலைகளைப் பல மாநிலங்களில் அமைக்கவேண்டும் என்பதை வற்புறுத்தி வருகிறோம்.

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : மத்திய சர்க்கார் சேலம் இரும்பு-உருக்குத் தொழிற்சாலை சம்பந்தமாகக் காலதாமதம் செய்துவருவது உண்மையிலேயே வருந்தத்தக்க ஒன்றாகும். நானும், தொழில் அமைச்சரும் இந்தியப் பிரதமரைச் சந்தித்து இதுபற்றி வலியுறுத்தினேம். விரைவில் நல்ல முடிவு அறிவிக்கப் படும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாகவே அறிவிப்பு வரக்கூடும். இல்லையென்றால் அதற்குப் பிறகு எவ்வாறு நடந்துகொள்வது என்பது பற்றி அனைவரும் கலந்து ஆலோசிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

திரு. கே. என். குமாரசாமி : சேலம் இரும்பு உருக்காலை பற்றிய சர்ச்சை நீண்டநாளாக இருந்து வருகிறது. இங்கே ஏற்படுத்துவது என்றால் ஆந்திராவிலும் ஏற்படுத்தியாகவேண்டுமே என்கிற

1970 மார்ச் 4]

அரசியல் காரணங்களுக்காக மத்திய அரசு தயக்கம் காட்டுகிறதா? அப்படித் தயக்கம் காட்டினுல் இந்த அரசு அதை எடுத்தே ஆக வேண்டும் என்பதை வற்புறுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்கள் எந்தக் காரணங்களைக்கொண்டு தயக்கம் காட்டினுலும் நாம் கவலைப்படப்போவதில்லை. நம்முடைய உரிமையை நாம் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திக்கொண்டே இருப்போம்.

ஏற்றுமதிப் பொருள்களை அதிகரிக்க திட்ட வாரியம்.

* 202. **வின.—திரு. எஸ். அக்னிராஜு:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்றுமதிப் பொருளை அதிகரிப்பதற்காகத் திட்டவாரியம் (Planning Board) அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரமென்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

திரு. எஸ். அக்னிராஜு: தலைவர் அவர்களே, நமது தமிழ் நாட்டில் ஏற்றுமதி செய்கின்ற பொருள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இருக்கிற தொடர்பு முறைகள் சரியாக இல்லாததே காரணம். ஆகவே இதை நல்லமுறையில் சீர்படுத்த இத்தகைய ஒரு போர்டு அமைப்பது பற்றி அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதுபற்றி கவனிக்க—ஸ்டேட் எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் அட்வைசரி போர்டு ஒன்று ஏற்கனவே முதல் அமைச்சர் தலைமையில் இயங்கி வருகிறது.

திரு. பி. வேலுசாமி: புதியதாக டிசைன்களைப் புகுத்தி—ஏற்றுமதி உறுதியாக—அதிகமாக இருக்க அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கைத்தறியைப் பொறுத்த வரையில் பயிற்சி நிலையங்கள் வைத்திருக்கிருேம். வெளிநாடுகளில் தேவைப்படுகிற டிசைன்களை அறிந்து அந்த டிசைன் பயிற்சியை இவர்களுக்கு அளித்து—உற்பத்தியாகிறவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் இருந்து கரும்பு, சர்க்கரை ஏற்றுமதி வெகுவாகக் குறைந்துவிட்டது. அதனுல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். ஜாவா போன்ற இடங்களில் உள்ளவர்கள்